# “கலைஞருக்குப் பாராட்டு

எஸ்.ஏ.

“18 ஆண்டுகளுக்கு முன் காணாமல் போன பிரசித்திப் பெற்ற திருக்காரவாசல் மரகதலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசியலுக்கு அப்பாற்பட்டு முதல்வர் கருணாநிதிக்கு பிரம்மாண்டமான பாராட்டு விழா நடத்தவுள்ளோம்” என்று அ.தி.மு.க. கிளைச் செயலாளர் ஒருவர் அதிரடியாக அறிவித்துள்ளார். தி.மு.க. முதல்வருக்கு அ.தி.மு.க. பாராட்டா? வித்தியாசமாக இருக்கிறதே என்று விசாரணையில் இறங்கினோம்.

திருவாரூர் மாவட்டம், திருக்காரவாசலில் உள்ள பிரசித்திப் பெற்ற கண்ணாயிர நாதர் கோயில், பாடல் பெற்ற சிவாலயம் ஆகும். அகத்திய முனிவர் நாடி ஜோதிடம் எழுதுவதற்கு அருள் கிடைத்த இடம் எனவும், சப்தவிட ஸ்தலங்களில் ஆதி விடங்கர் ஸ்தலம் எனவும் போற்றப்படுகிறது. இக்கோயிலில் கொடுக்கப்படும் கண் மருந்து தைலம் மூலம் வைத்தியர்கள் கைவிட்ட கண் நோய் தீரும் என்ற நம்பிக்கையும் உண்டு.



சேதுராமன்

இந்நிலையில், கண்ணாயிர நாதர் கோயிலில் மூலவருக்கு அருகில் உள்ள தியாகராசர் சன்னதியில் மரகதலிங்கம் ஒன்று பூஜிக்கப்பட்டு வந்தது. இது 1992ஆம் ஆண்டு திருடு போனது. பல கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த லிங்கத்தைக் கண்டுபிடிக்க போலீஸார் பல வகைகளில் தேடுதல் வேட்டை நடத்தினர். ஆனால் மரகதலிங்கத்தை மீட்க முடியவில்லை.

இச் சூழ்நிலையில் திருத்துறைப்பூண்டி, அருள்மிகு பிறவி மருந்தீஸ்வரர் கோயிலில் காணாமல் போன மரகதலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த லிங்கம் கிடைத்த 42வது நாளில் திருக்காரவாசல் மரகதலிங்கத்தையும் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளது காவல்துறை.



மகேஷ்வரன்

மரகதலிங்கம் கிடைத்த செய்தி அறிந்த சில மணி நேரத்தில் திருக்காரவாசல் கோயில் முன் கூடிய ஊர் மக்கள் பட்டாசு வெடித்து ஆடிப்பாடி மகிழ்ந்தனர். போலீஸுக்கும், தமிழக அரசுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக ஏராளமான டிஜிட்டல் போர்டுகளையும் வைத்துள்ளனர்.

நாம் கண்ணாயிரநாதர் கோயிலுக்குச் சென்றோம். இக்கோயிலின் குருக்கள் மகேஷ்வரனை சந்தித்தோம். அவர் நம்மிடம், “1992ஆம் ஆண்டு காணாமல் போய் 18 ஆண்டுகளுக்குப் பின் எந்த சேதாரமும் இல்லாமல் மரகதலிங்கம் கிடைத்தது எனக்கு மட்டுமல்ல, ஊருக்கே மகிழ்ச்சி. காலம் கடந்தாலும் சிலை திருடிய கள்வன் கண்டுபிடிக்கப்பட்டது இறை சக்தி என்றுதான் சொல்ல வேண்டும். சிலை காணாமல் போன துயரத்தில் இருந்தபோது காஞ்சி சங்கராச்சாரியார் கொடுத்த லிங்கத்தை அந்த இடத்தில் வைத்து இரண்டு வேளை பூஜித்து வந்தோம். தற்போது லிங்கம் கிடைத்துள்ள நிலையில் மரகதலிங்கத்திற்கு சிறப்புப் பூஜைகள் செய்வோம். இதற்காக பாடுபட்ட போலீஸ் அதிகாரிகளுக்கு ஆலய பணியாளர்கள் சார்பில் ஆயிரமாயிரம் நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்” என்றார் மகிழ்ச்சி பொங்க!

அடுத்து நம்மிடம் பேசிய அப்பர் சேவாலய நிர்வாகி சேதுராமன், “என் தந்தை 25 வருடங்கள் இந்த திருக்காரவாசல் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தவர். அவருடன் சேர்ந்து கோயிலுக்குச் சென்று வந்த காலம் தொட்டு இன்று வரை இக்கோயிலோடு தொடர்பு கொண்டவன் நான். வீரையன் என்பவர் நிர்வாக அறங்காவலராக இருந்தபோது மரகதலிங்கம் காணாமல் போனது. இதையடுத்து வலிவலம் காவல் நிலையம் மட்டுமின்றி, நாகை எஸ்.பி.வரை புகார் கொடுத்தோம். பல தொலைகாட்சிகளிலும் பேட்டி கொடுத்து எங்கள் கவலைகளைப் பகிர்ந்து கொண்டோம். இதற்காக ஊர்க் கூடி பல யாகங்களை நடத்தினோம். பிரார்த்தனைகளைச் செய்தோம். லிங்கம் எப்படியும் கிடைத்துவிடும் என்று நம்பினோம். எங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. திருத்துறைப்பூண்டி கோயில் மரகத லிங்கம் கிடைத்த உடன், எங்கள் ஊர் கோயில் மரகதலிங்கமும் கிடைத்ததாகக் கனவு கண்டேன்! அது பலித்துவிட்டது. எங்கே மரகத லிங்கத்தைப் பார்க்காமல் இறந்துவிடுவேனோ என்று நினைத்தேன்” என்றார் உணர்ச்சிபூர்வமாக.